
தினமணி

**எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு கனடா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம்**

First Published : 04 Sep 2010 12:42:13 AM IST



டொரண்டோ (கனடா) செப். 3: பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கு (85) கனடாவில் உள்ள அல்பெர்ட்டா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்க உள்ளது.

÷தனி ஒரு மனிதனாக ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்புக்காகவும், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக உலக உணவு பாதுகாப்புக்கான அவரது பங்களிப்பைக் கருத்தில் கொண்டும் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.

÷வரும் அக்டோபர் 7-ம் தேதி பல்கலைக்கழகத்தில் நடைபெறும் விழாவில் "அறிவியலுக்கான கௌரவ டாக்டர் பட்டம்' என்ற விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது.

அப்போது நீடித்த வேளாண்மை என்ற தலைப்பில் அவர் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுகிறார்.

**"மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள்'**

First Published : 03 Sep 2010 11:51:47 AM IST

கரூர், செப்.2: மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக கரூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குநர் கு.பா. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியது:

கரூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்திற்குள்ட்பட்ட வெண்ணைய்மலை, வேலாயுதம்பாளையம் மையங்களில் 2010-11 ஆம் ஆண்டுக்கான வேளாண் இடுபொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

நடவுப் பணிகள் தொடங்கவுள்ள இவ்வேளையில், நெல் ரகத்தில் ஐ.ஆர்.20 மற்றும் நிலக்கடலையில் (டி.எம்.வி.2 சான்று விதை) விதைகள் மற்றும் சூடோமோனாஸ், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ஜிப்சம் ஆகியவை மானிய விலையில்

வழங்கப்படுகின்றன. எனவே, கரூர் வட்டார விவசாயிகள் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**விளை நிலங்கள் வீட்டு மனைகளாவதை தடுக்க கொமுக வலியுறுத்தல்**

First Published : 03 Sep 2010 11:50:26 AM IST

கரூர், செப்.2: விளை நிலங்கள் வீட்டுமனைகளாவதைத் தடுக்க வேண்டும் என கொங்குநாடு முன்னேற்ற கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து கொமுக மாநில துணைப் பொதுச்செயலர் ஆர். நடராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை:

கொங்கு நாடு முழுக்க, முழுக்க விவசாயத்தை சார்ந்த பகுதியாக இருந்து வந்தது. ஆனால் பருவ மழை பொய்த்ததால் விவசாயிகள் வேறு தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால், தங்களது விளை நிலங்களை வீட்டுமனைகளாகப் பிரித்து அவர்கள் விற்று வருகின்றனர். இதனால், தமிழகத்தில் வேளாண் நிலங்களின் பரப்பளவு கணிசமாகக் குறைந்து வருவதால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் நிலவுகிறது. எனவே, மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப மக்களின் உணவுத் தேவையும் பூர்த்தியாக, தமிழக அரசு முனைப்பு காட்ட வேண்டும்.

நவீன முறையில் விவசாயம் செய்ய விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதோடு அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், உரங்கள், விதைகளை மானிய விலையில் வழங்க அரசு முன்வர வேண்டும்.

கேரளத்தைத் தொடர்ந்து தமிழகத்திலும் விளைநிலங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு தடை விதித்து விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார் நடராஜன்.

**தோட்டக்கலை விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

First Published : 03 Sep 2010 10:43:56 AM IST

திருத்தணி, செப். . 2: வேளாண்மை, தோட்டக்கலை குறித்து உழவர் மன்ற அமைப்பாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம், திருத்தணி வேளாண்மை அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு காஞ்சிபுரம் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சீதாராமன் தலைமை வகித்து செம்மை நெல் சாகுபடி மற்றும் பயறு வகைகளுக்கு டி.ஏ.பி. கரைசல் தெளித்தல் குறித்து விளக்கினார். திருத்தணி வேளாண்மை உதவி இயக்குநர் முகமது ரபிக் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம், காப்பீட்டு திட்டம் மற்றும் எண்ணெய்வித்து திட்டங்கள் பற்றி விளக்கி, மானிய விவரங்களை தெரிவித்தார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் நவநீதகண்ணன் மா, கொய்யா சாகுபடி குறிப்புகள், துல்லிய நீர்பாசன திட்டம், மூலிகை பயிர்கள் சாகுபடி குறித்து விளக்கி அதற்கு அரசு வழங்கும் மானிய பயிர்கள் பற்றியும் பேசினார்.

காஞ்சிபுரம் களர் உவர் சீர்திருத்த திட்ட வேளாண்மை அலுவலர் நரசிம்ம ரெட்டி திட்டம் பற்றி விளக்கி, செயல் விளக்கம் செய்து காட்டினார். இந்த திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் திருத்தணியை அடுத்த திருவாலங்காடு பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதற்கான விவசாயிகள் மண் பரிசோதனை செய்து களர், உவர் பாதிப்பு உள்ளவர்கள் மானியம் பெற்று சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறினார்.

**இன்று விவசாயிகள் குறை தீர்வு கூட்டம்**

First Published : 03 Sep 2010 10:43:09 AM IST

திருவள்ளூர், செப். 2: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வேளாண்மைத் துறை, வருவாய்த்துறை, மின் வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித்துறை வேளாண்மைப் பொறியியல் துறை உள்ளிட்ட விவசாயம் சார்ந்த அனைத்து துறை அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

எனவே இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று பயன் பெற வேண்டும் என ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்

**எண்ணெய் பனை சாகுபடி செய்ய ரூ. 11.35 லட்சம் மானியம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,01:37 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூர் வட்டாரத்தில் எண்ணெய் பனை சாகுபடிக்கு 11.35 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

திருநாவலூர் வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: திருநாவலூர் வட்டாரத்தில் எண்ணெய் பனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இரண் டரை ஏக்கருக்கு 143 கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் பராமரிப்பு செலவிற்காக முதல் ஆண்டிற்கு 4,140 ரூபாயும், இரண்டாம் ஆண்டில் 2,450 ரூபாயும், மூன்றாமாண்டில் 3,250 ரூபாயும் வழங் கப்படுகிறது. கன்றுகளை பராமரிக்க 50 சதம் மானிய விலையில் ரசாயன உரம் மற்றும் நுண்ணுயிர் வழங்கப்படுகிறது. மேலும் திருநாவலூர் வட்டாரத்தில் 2010-11 ஆண்டிற்கு எண்ணெய் அபிவிருத்தி திட்டத்தின் படி கன்றுகள் நடவு மானியமாக 3.75 லட்ச ரூபாயும், பராமரிப்பு மானியமாக முதலாண்டு 3.50 லட்சம், இரண்டாம் ஆண்டு 60 ஆயிரம், மூன்றாம் ஆண்டு 1.26 லட்சம், நான்காம் ஆண்டு 1.62 லட்சம் ரூபாயும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மானியமாக 57 ஆயிரம் உட்பட 11.35 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இந்த திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

**அனுமதி பெறாத பூச்சி மருந்து 12 உரக்கடைகளுக்கு தடை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,02:39 IST

நாமக்கல்: தனியார் பூச்சி மருந்து கடைகளில் வேளாண் உதவி இயக்குனர்கள் திடீர் ஆய்வு செய்து, 12 கடைகளில் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருந்த 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பூச்சி மருந்து கண்டறிந்தனர். மேலும், அக்கடைகளில் பூச்சி மருந்து விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.நாமக்கல் மாவட்ட கலெக்டர் உத்தரவுப்படி வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் மேற்பார்வையில் வேளாண் உதவி இயக்குனர்கள் முரளிதரன், துரைசாமி ஆகியோர் கொண்ட குழுவினர் நாமக்கல், பரமத்தி, கபிலர்மலை வட்டாரங்களில் உள்ள பூச்சி மருந்து கடைகளில் திடீர் ஆய்வு செய்தனர்.அந்த ஆய்வின்போது பூச்சி மருந்து கடைகளின் உரிமம், இருப்பு பதிவேடு, கொள்முதல் பட்டியல், முதன்மைச் சான்று ஆகியவை சரிபார்க்கப்பட்டது.

மேலும், 12 தனியார் கடைகளில் அனுமதி பெறாத பூச்சி மருந்து மற்றும் களைக்கொல்லிகள் இருப்பு வைத்திருந்தது தெரியவந்தது.அதையடுத்து, 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய அனுமதி பெறாத பூச்சி மருந்து, களைக்கொல்லிகளை விற்பனை செய்யவும், கடை விற்பனைக்கும் தடை விதித்து உத்தரவிட்டனர். மேலும், அனுமதி பெறப்பட்ட பூச்சி மருந்துகளை கொள்கலன்களில் தான் முழுமையாக விற்பனை செய்ய வேண்டும். கொள்கலன்களை பிரித்து சில்லறை விநியோகம் செய்யக்கூடாது.

அவ்வாறு விநியோகம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, எச்சரித்தனர்.அதுபோல் பூச்சி மருந்து கடைகளில் பூச்சி மருந்து மற்றும் களைக்கொல்லி வாங்கும்போது விற்பனை ரசீதை கட்டாயமாக கேட்டுப்பெற வேண்டும். ரசீது வழங்கப்படாத பூச்சி மருந்து விற்பனை கடைகள் குறித்த விபரங்களை சம்மந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனருக்கு உடனடியாக தகவல் அளிக்க வேண்டும் என விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.வேளாண் உதவி இயக்குனர்கள் நமச்சிவாயம், வீரப்பன், தங்கராஜ், லோகநாதபிரகாசம், குருலிங்கம், ராதாமணி ஆகியோர் ஆய்வின்போது உடனிருந்தனர்.

**செம்மை நெல் சாகுபடி கிராம முனைப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,02:40 IST

ராசிபுரம்: "செம்மை நெல் சாகுபடி குறித்த கிராம முனைப்பு இயக்கக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பம் குறித்து கிராம முனைப்பு இயக்கக் கூட்டம் ஆர்.புதுப்பட்டி, ஈஸ்வரமூர்த்திபாளையம், மூலப்பள்ளிப்பட்டி, பிலிப்பாக்குட்டை, முள்ளுக்குறிச்சி, அரியாகவுண்டம்பட்டி, கரியாம்பட்டி, ஆயில்பட்டி, பெரியகோம்பை, மங்களபுரம், டி.பச்சுடையாம்பாளையம், தண்ணீர்பந்தல்காடு, திம்மநாயக்கன்பட்டி, சீராப்பள்ளி, குருவாலா ஆகிய கிராமங்களில் நடக்கிறது.

அதில், விதையளவு, விதைநேர்த்தி, அடியுரம், மேலுரம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகள், களைக்கொல்லி, இலைவண்ண அட்டை மூலம் உரப்பரிந்துரை செய்தல் ஆகிய சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து வயல்களில் செயல்விளக்கம் காண்பிக்கப்படும். அதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஈரோட்டில் சீத்தாப்பழம் சீஸன் துவக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,01:57 IST

ஈரோடு: ஈரோட்டில் சீத்தாப்பழம் சீஸன் துவங்கியது.தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து சீத்தாப்பழம் ஈரோடு மார்க்கெட்டுக்கு வரத்தாகிறது. தள்ளுவண்டிகளிலும் ஆங்காங்கே விற்பனை செய்யப்படுகிறது. சீத்தாப்பழம் அதிக நாளைக்கு வைத்திருக்க முடியாது என்பதால் இரண்டு, மூன்று நாட்களில் விற்பனை செய்கின்றனர். சிறிய ரக சீத்தா பழம் ஒரு கிலோ 20 ரூபாய்க்கும், பெரிய வகை சீத்தாப்பழம் ஒரு கிலோ 30 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. உடல் சூட்டை கட்டுப்படுத்துவதால் சீத்தாப்பழம் விற்பனை அதிகரித்துள்ளது.

சீத்தாப்பழம் வியாபாரிகள் கூறியதாவது:ஈரோடு மார்க்கெட்டுக்கு சேலம் மாவட்டம் மேச்சேரி, ஆத்தூர், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதியில் இருந்து சீத்தாப்பழம் வரத்தாகிறது. சென்ற இரண்டு வாரத்துக்கு முன் பழம் வரத்து துவங்கியது. அப்போது சிறிய அளவு பழங்கள் மட்டுமே வந்தது. தற்போது சீஸன் துவங்கி உள்ளதால் சிறிய ரகம், பெரிய ரகம் வரத்தாகிறது.

தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து ஈரோடு நேதாஜி மார்க்கெட்டுக்கு வரும் பழங்களை, தரம் பிரித்து மாவட்டம் முழுவதும் சப்ளை செய்கிறோம். சீதபேதி, உடல் சூட்டை கட்டுப்படுத்தும் தன்மை உள்ளதால் மக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். சில நாட்களுக்கு முன் ஒரு கிலோ 25 முதல் 35 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது சீஸன் துவங்கி உள்ளதால் ஒரு கிலோ 20 முதல் 30 ரூபாய்க்கு விற்பனையாகிறது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வாழை சாகுபடியில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,22:00 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதியில், கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறையால், விவசாயிகளே வாழை, சாம்பார் வெள்ளரி, மரவள்ளியை சாகுபடி செய்கின்றனர்.
இதில், கதலி வாழை கன்றுகள் நடப்பட்டுள் ளன. இக்கன்றுகள் சரியாக 11 மாதம் முதல் 12 மாதத்திற்குள் வாழை வருகிறது. இதற்கு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள வேண்டும், இதில் கூலி தொழிலாளர்களுக்கு
அதிகமாக வேலை இல்லை. சிறிய வேலைகளை விவசாயிகளே செய்து கொள்ளலாம். வாழைத்தார்களை கேரளாவில் உள்ள வியாபாரிகள் நேரடியாக வந்து, கதலி வாழைப்பழங்களை கிலோ ஒன்றுக்கு ரூ.16 முதல் ரூ.20 வரை கொடுத்து, எடுத்து செல்கின்றனர். மரவள்ளியும்,

சாம்பார் வெள்ளரியும் அவர்களே எடுத்து செல்வதால், கூலி தொழிலாளர்களுக்கு வேலை இல்லை.
இதற்காக விவசாயிகள் செலவு செய்ய வேண்டியதும் இல்லை. இவ்வகை சாகுபடிக்கு, விவசாயிகளுக்கு அதிகளவில் லாபம் கிடைக்கிறது. இதனால், இப்பகுதியில் உள்ள விவசாயிகள் வாழை சாகுபடியில் ஈடுபடுகின்றனர்.

**ஊடுபயிராக காபி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,21:21 IST

மஞ்சூர் : காபிக்கு போதிய விலை கிடைப்பதால், தேயிலைத் தோட்டத்தில் ஊடுபயிராக பயிரிடப்பட்டுள்ளது அதிகரித்துள்ளது.
மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 30க்கு மேற்பட்ட கிராமங்களில், தேயிலை விவசாயம் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழக கேரள எல்லையை ஒட்டியுள்ள கிண்ணக்கொரை, இரியசீகை உட்பட பல பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில், ஊடுபயிராக காபி பயிரிடப்பட்டுள்ளது. அறுவடைக்கு தயாராக, காபி பழங்கள் உள்ளன. தேயிலைக்கு விலை வீழ்ச்சியானாலும், காபிக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**உண்மை தகவலை விவசாயிகள் தர வேண்டும் : தஞ்சை கலெக்டர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,01:16 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் விவசாயிகளுக்கு அரசின் மின்மோட்டார் வழங்கும் திட்டம் குறித்து தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கரூர் ஆகிய எட்டு மாவட்ட விவசாயிகளின் கருத்து மற்றும் ஆலோசனை கேட்கும் கூட்டம் நடந்தது.
தஞ்சை கலெக்டர் சண்முகம் பேசியதாவது: இத்திட்டத்தில் விவசாயிகளிடம் கருத்து கேட்கப்பட்டு முக்கிய முடிவு, திட்ட இறுதி வடிவம் வழங்கப்படும். விவசாயிகள் பயன்படுத்தும் மோட்டரின் தரம், திறன், அனுமதி பெற்ற மோட்டார் திறன், பயன்படுத்தும் மோட்டாரின் திறன், அப்பகுதியின் நிலத்தடி நீர், தேவை போன்றவை அறிந்தால் மின்சாரத்தை சிக்கனப்படுத்தி, தரமான மோட்டார் மூலம் கூடுதல் நீரைப்பெறலாம்.
விவசாயிகள் தாங்கள் பயன்படுத்தும் மோட்டார், அனுமதி பெறப்பட்ட எச்.பி., அளவு, பயன்படுத்தும் மோட்டாரின் எச்.பி., நிலத்தடி நீர் நிலை போன்றவற்றை தவறின்றி தெரிவிக்க வேண்டும். அதற்கேற்றவாறு மின்மோட்டார் சப்ளை செய்தல், மின்திறன் மாற்றிகளை அமைத்தல், திட்டத்தை வடிவமைத்தல் செய்யலாம்.

விவசாயிகள் கொடுக்கும் தகவல் அடிப்படையில் அவர்களுக்கு எந்த பாதிப்பு, பறிமுதல், நடவடிக்கை எதுவும் வராது. அனுமதி பெற்றதைவிட கூடுதல் திறன் கொண்ட மோட்டார் பயன்பாடு உட்பட பல காரணத்தால் மாதம் 190 டிரான்ஸ்ஃபார்ம் பழுதாகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

மின்வாரிய தலைமை பொறியாளர் சீதாராமன் பேசுகையில், ""மின் இழப்பை தவிர்த்து, கூடுதல் திறன் கொண்டு மோட்டார் வழங்கவும், தேவையான மின்சாதனம், தொழில் நுட்பங்களை அந்தந்த பகுதியில் அமைக்கவும் விவசாயிகள் உண்மை தகவலை தர வேண்டும். அவ்வாறு வழங்கினால் விரைவாக திட்டம் நடைமுறைக்கு வரும்," என்றார்.

மேற்பார்வை பொறியாளர் (தொழில்துறை - ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு) விஜயகுமார், ""பழுதான, காலாவதியான, குறைந்த திறன் கொண்ட மின் மோட்டாரால் 17 சதவீத மின் இழப்பு ஏற்படுகிறது. குறைந்த திறனுக்கு அனுமதி பெற்று கூடுதல் திறன் மோட்டாரை பயன்படுத்துவதால் டிரான்ஸ்ஃபார்ம் பழுதாகிறது. விவசாயிகள் உண்மை கருத்தை வழங்கினால் 20 சதவீத மின்சாரத்தை சேமித்து பயன்பாட்டுக்கு வழங்கலாம். இத்திட்டம் வகுத்ததும் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் செயல்படுத்தி, அதில் வரும் பிரச்னை தீர்க்கப்படும். முதற்கட்டமாக 2.5 லட்சம் மின்மோட்டார் மாற்றி அமைக்கப்படும்," என்றார்.

புதுக்கோட்டை முத்துகுமரன், ""450, 500 அடியில் நீர் உள்ளதால் விவசாயிகள் பயன்படுத்தும் மோட்டாரை மாற்றுவதைவிட அவர்கள் கேட்கும் திறன் கொண்ட மோட்டாரை வழங்க வேண்டும். உண்மை தகவலை விவசாயிகள் வழங்கும் போது அவர்கள் மீது நடவடிக்கை வரக்கூடாது," என்றார்.

அரியலூர் செங்கமுத்து, ""விவசாயம், விவசாயிகள் பாதிக்காத வகையில் தரமான மோட்டார் வழங்க வேண்டும்," என்றார்.

பெரம்பலூர் ராமசாமிசெட்டியார், ""மோட்டார் பழுது, தேய்மானத்தால் அதிக மின்சாரம் செலவாகிறது. ஐ.எஸ்.ஐ., முத்திரை பெற்ற, அந்தந்த பகுதியில் பரவலாக விவசாயிகள் பயன்படுத்தும் மோட்டாரைத்தான் வழங்க வேண்டும். அரசு யாருக்காவது ஒருவருக்கு ஆர்டரைக்கொடுத்து பெயர் தெரியாத கம்பெனி மோட்டாரை வழங்கினால் திட்டம் வீணாகும்," என்றார்.

கக்கரை சுகுமார், ""சிறு, குறு, பெரிய விவசாயிகள் என பிரிக்காமல், அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மின்மோட்டார் வழங்க வேண்டும்," என்றார்.

சுவாமிமலை சுந்தரவிமலநாதன், ""விவசாய மோட்டாரால் மட்டும் 17 சதவீத மின் இழப்பு ஏற்படவில்லை. தொழிற்சாலைகள், நிறுவனங்களில் மின்திருட்டை தடுக்க வேண்டும். தரமான டிரான்ஸ்ஃபார்ம், வயர்கள் பொறுத்த வேண்டும். பராமரிக்க வேண்டும். 20 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும். இருமுனை மின்சாரத்தையும் பயன்படுத்த வகை செய்ய வேண்டும். விவசாயி விரும்பும் மோட்டாரை தர வேண்டும்," என்றார். இவ்வாறு விவாதம் நடந்தது.

பாசிப் பயறு சாகுபடியில் நெல்லைவிட அதிக வருவாய்: கலெக்டர் யோசனை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,02:14 IST

மதுரை : ""பாசிப் பயறு சாகுபடி செய்வதால் நெல்லைவிட அதிக மகசூல் கிடைக்கிறது,'' என கலெக்டர் காமராஜ் கூறினார். மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகளை கலெக்டர் காமராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் பிச்சை ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பனையூரில் தானம் அறக்கட்டளை சார்பில் நமக்குநாமே திட்டத்தில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத்தை பார்வையிட்ட கலெக்டர் கூறுகையில், ""கழிப்பறை தண்ணீரை சுத்தப்படுத்தி விவசாய நிலங்களுக்கு பாய்ச்சும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படாது,'' என்றார். பஞ்., தலைவர் ஆனந்தன், சுயஉதவி குழுக்களின் நிர்வாகிகள் மல்லிகா, சந்திரா உடனிருந்தனர்.

விடத்தக்குளத்தில் நீர்வள நிலவள திட்டத்தில் மண்புழு உரம் தயாரிப்பை பார்வையிட்டார். தொடர்ந்து வடகரையில் ராதாகிருஷ்ணன் என்பவர் வயலில் பாசிப்பயறு செயல் விளக்கத் திடலை ஆய்வு செய்தார். விவசாய இணைஇயக்குனர் சங்கரலிங்கம், துணைஇயக்குனர் சம்பத்குமார், உதவி இயக்குனர் மனோகரன் உடனிருந்தனர்.

கலெக்டர் கூறுகையில், ""ஒரு எக்டேரில் பாசிப்பயறு சாகுபடி செய்தால் நெல்லைவிட அதிக மகசூல் கிடைக்கிறது. இங்கு 800 கிலோ வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் ரூ. 52 ஆயிரம் வரை விவசாயிக்கு கிடைக்கும். இதை நெல்லைவிட குறைந்த நாட்களில் (65நாட்கள்) பெறலாம். இதற்காக விதைக்கு 1300 ரூபாய், உரத்திற்கு 1200 ரூபாய் என 2500 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது,'' என்றார்.

கீழக்கோட்டையில் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக்கும் அரசு இலவச வீட்டுவசதி திட்டப் பணியை பார்வையிட்டார். மாவட்ட அளவில் 11 ஆயிரத்து 649 பேர் இதில் பயன்பெறுவர். பின்னர் கரிசல்பட்டி கண்மாய்க்கான வரத்துக் கால்வாயில் தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்தில் நடக்கும் பணிகளை கலெக்டர் பார்வையிட்டார். டி.கல்லுப்பட்டியில் டவுன் பஞ்., நகராட்சி சார்பில் கம்போஸ்ட், மண்புழு உரம் தயாரிப்பை, தலைவர் கருமலையான், செயல் அதிகாரி கலையரசி விளக்கி கூறினர்.

உசிலம்பட்டி அருகே மோதகம் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் சமத்துவபுரத்தை பார்வையிட்ட அவர், ""பணிகள் வரும் மார்ச்சுக்குள் முடிவடையும்,'' என்றார். தொட்டப்பநாயக்கனூர் பூச்சிப்பட்டியில் ராஜசேகரன் என்பவர் தோட்டத்தில் அமைக்கப்பட்ட துல்லிய பண்ணை திட்டத்தை பார்வையிட்டார். தொடர்ந்து 58 கிராம கால்வாய் திட்டப் பணிகளை ஆய்வு செய்த அவர், "இத்திட்டம் 2011 மார்ச்சுக்குள் முடிவடையும்' என்றார். செயற்பொறியாளர் சந்திரசேகரன், உதவிசெயற்பொறியாளர் மருதலட்சுமணதாஸ் உடனிருந்தனர்.

புவி வெப்பமயமாகி வருவதால் கருகும் தென்னை : மழையின்றி விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,02:13 IST

மதுரை : புவி வெப்பமயமாகி வருவதால் மழையளவு படிப்படியாக குறைந்து வருகிறது. போதுமான தண்ணீர் இன்றி, மதுரை மாவட்டத்தில் தென்னை மரங்கள் கருகி வருகின்றன. பாசன வசதியின்றி, விவசாயிகள் ஆழ்ந்த கவலையில் உள்ளனர்.
மதுரை மாவட்டத்தில் தென்னை மரங்கள் 60 முதல் 70 அடி உயரம் கொண்ட "நெட்டை' (வாழ்நாள் 70 முதல் 80 ஆண்டு), 20 முதல் 40 அடி உயரம் கொண்ட "நெட்டை குட்டை' (40 ஆண்டு), 10 முதல் 20 அடி உயரம் கொண்ட "குட்டை' (30 ஆண்டு) என மூன்று ரகத்தில் வளர்க்கப்படுகின்றன. புவி வெப்பமயமாகி வருவதால், கடந்த சில ஆண்டாக மழையளவு படிப்படியாக குறைந்து வருகிறது. போதுமான தண்ணீர் இன்றி தென்னை மரங்கள் பட்டுப்போகின்றன.
கருகும் தென்னை: மதுரையில் அலங்காநல்லூர், பாலமேடு, முடுவார்பட்டி, உசிலம்பட்டி, எழுமலை, மேலூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சிலர் தங்களது நிலத்தில் மானாவாரியாக தென்னை வளர்க்கின்றனர். தென்னை வளர 30 முதல் 32 செல்சியஸ் வெப்பம் தேவை. ஆனால், மதுரையில் 35 செல்சியஸ் அளவுக்கு மேல் வெப்பம் நிலவுவதால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. பிற மாவட்டங்களில் பலத்த மழை பெய்தும், மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து பருவமழை பொய்த்து வருவதால் தண்ணீர் இன்றி தென்னைகள் கருகி வருகின்றன. கிணற்றுப்பாசன வசதியுள்ள பகுதிகளில் தென்னைகள் ஓரளவு பிழைத்துள்ளன. எனினும், பற்றாக்குறை தண்ணீரால் தென்னையில் பிஞ்சிலேயே காய்கள் கீழே விழுகின்றன. தோகைகள் முழுவதும் கருகிய தென்னை மரங்களை விவசாயிகள் குறைந்த விலைக்கு மர அறுவை மில்களில் விற்று வருகின்றனர். பிழைப்புக்கு வழியின்றி கவலையில் உள்ளனர்.
காப்பாற்றும் வழி: தென்னையை காப்பாற்ற 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தழைச்சத்து அதிகம் உள்ள சணப்பை, கொழிஞ்சியை ஊடுபயிராக விதைக்கும்போது, தென்னைக்கு சத்து கிடைக்கும். இயற்கை உரம் வைக்க வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தென்னை ஒன்றுக்கு நுண்ணுயிர் சத்துள்ள ஒரு கிலோ உரம் வைக்க வேண்டும். நிலத்தை ஆழமாக உழவடை செய்ய வேண்டும்.
தென்னையில் நோய் தாக்குதல் உள்ளதா என்பதை கண்டறித்து தொடர்ந்து பராமரிக்க வேண்டும். தென்னை வளர்ப்பில் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். மாற்று விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,02:50 IST

வாடிப்பட்டி : வாடிப்பட்டி, ஆண்டிபட்டி பங்களாவில், பெரியாறு பாசன விவசாயிகள் சங்கக் கூட்டம் தலைவர் தேவராஜ் தலைமையில் நடந்தது. செயலாளர் ராமசாமி முன்னிலை வகித்தார். கூட்டத்தில், 4 ஆயிரம் மி.க. அடி தண்ணீர் பெரியாறு அணையில் தேங்கினால், பேரணையில் இருந்து கள்ளந்திரி வரை பாசனத்திற்கு திறந்து விட வேண்டும் என்ற விதியின் அடிப்படையில், இப்பகுதிக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்பது உள்பட, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகி மகாலிங்கம் நன்றி கூறினார்.

**எண்ணெய் வித்து திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,02:46 IST

செல்லம்பட்டி : செல்லம்பட்டி வட்டாரம் குறவக்குடி கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பாக "ஐசோபாம்' எண்ணெய் வித்து திட்டத்தின் இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம், வேளாண்மை உதவி இயக்குனர் அழகப்பன் பயிற்சிகள் வழங்கினர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இலவச விதைகள், "ஆத்மா' திட்டம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி செயல்விளக்க இடு பொருட்கள் வழங்கினர். வேளாண்மை அலுவலர் சேகர் நன்றி கூறினார்.

**மாவட்டத்தில் மானிய விலை சான்று விதை வினியோகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2010,23:07 IST

ராமநாதபுரம் : ""மாவட்டத்தில் மானிய விலையில் சான்றுவிதைகள் வினியோகம் செய்யப் படும்,'' என, வேளாண் துணை இயக்குனர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் எக்டேர் பரப்பளவில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 90 சதவீத பரப்பு மானாவரியாக சாகுபடி செய்கின்றனர். வடகிழக்கு பருவமழையின் போது கண்மாய்கள் நிரம்பினால், ஆயக்கட்டு பகுதிகளில் மானாவரியாக சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், விவசாயம் செய்ய ஏதுவாக, விதைகளை இருப்பு வைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வேளாண் துறை மூலம் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், விதை கிராம திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டங்கள் மூலம் மானியத்தில் நெல் விதை வினியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் நலன் கருதி, சான்று பெற்ற விதைகளான ஆடுதுறை 45, 43, 39, ஐ.ஆர்.36, பி.பி.டி., ஆகிய ரகங்கள் வினியோகிக்கப்படுகிறது. தனியார் கடைகள் மூலம் வினியோகிக்கப்படும் விதைகளுக்கு கிலோவுக்கு ஐந்து ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.
மாவட்டத்தின் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஒருங் கிணைப்பில் , அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும் சான்று பெற்ற நெல் விதைகள் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. இவற்றுக்கும் கிலோவுக்கு ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படும். இதை விவசாயிகள் பயன்படுத்தி லாபம் அடையுமாறு, கேட்டுகொண்டுள்ளார்.

**நெற்பயிரில் குருத்துப்பூச்சிகட்டுப்படுத்தும் முறைகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,01:54 IST

திருநெல்வேலி:நெற்யிரில் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து நெல்லை வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:மானூர் வட்டாரத்தில் தற்சமயம் நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதல் அதிக அளவில் தென்படுகிறது. குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகள் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். இளம் பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதலால் நடுக்குருத்து காய்ந்து காணப்படும். குருத்தினை பிடித்து இழுத்தால் கையோடு வந்துவிடும்.தண்டை பிரித்து பார்த்தால் அதனுள் புழுவையும், கழிவுகளையும், கூட்டையும் பார்க்கலாம். பால் பிடிக்கும் தருணத்தில் குருத்துப்பூச்சி தாக்குதல் ஏற்படின் வெளிவரும் கதிர் வெண் சாவியுடன் காணப்படும். பகலில் குறைந்த வெப்பமும், அதிகமான ஈரப்பதமும், குளிர்ந்த சீதோசன நிலையில் இப்பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கும்.

நட்ட வயலில் வளர்ச்சி பருவத்தில் 10 சதவீத நடுக்குருத்து காய்ந்து காணப்பட்டால் பொருளாதார சேத நிலையை தாண்டி விட்டதாக எடுத்து கொள்ளலாம். உடனடியாக பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். குருத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த புரோபோனோஸ்பாஸ் 2 மி.லி/லிட்டர் என்ற அளவில் டினோபால் ஒட்டும் திரவத்துடன் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும். புரோனோபாஸ் செல்கிரான் மற்றும் கியூரோக்ராண் என்ற வணிக பெயர்களில் கிடைக்க பெறுகிறது.தாக்குதல் அதிகம் தென்பட்டால் 15 நாட்கள் கழித்து மோனோகுரோட்டோபாஸ் 2 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம் என நெல்லை வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**பழவூரில் விவசாயிகள் பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2010,01:55 IST

திருநெல்வேலி:பழவூரில் விவசாயிகள் பயிற்சி நடந்தது.வள்ளியூர் வட்டாரம் பழவூர் கிராமத்தில் வேளாண்மை துறையின் மூலம் ஐசோபாம் (எண்ணெய் வித்து) திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். வள்ளியூர் வேளாண்மை உதவி இயக்குநர் மார்சலின் வரவேற்றார்.வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டம்) துரைபாண்டியன் நிலக்கடலை பயிர் சாகுபடி முறைகள் பற்றி கூறினார். வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம்) தேவசகாயம் தென்னை சாகுபடி முறைகள் பற்றி பயிற்சி அளித்தார். விதை ஆய்வு இயக்குநர் சவுந்தர்ராஜன் விதை நலம் பேணுதல் பற்றி கூறினார்.

வள்ளியூர் வேளாண்மை அலுவலர் சுஜாதாபாய் உயிர்உர விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். கருத்துகாட்சி அமைக்கப்பட்டிருந்தது. விவசாயிகளுக்கு ஊக்க தொகையும், மானிய விலையில் உயிர் உரங்களும் வழங்கப்பட்டது.ஏற்பாடுகளை பழவூர் வேளாண்மை உதவி அலுவலர்கள் சிவநீலன், சதீஷ்குமார் செய்திருந்தனர்.

***தென்னை வளர்ச்சிக்காக ரூ.9 கோடி செலவில் புதிய திட்டம் கொச்சியில் நடந்த விழாவில், மத்திய மந்திரி கே.வி.தாமஸ் தகவல்***

*பெரும்பாவூர்,செப்.4–*

*கேரளாவில் தென்னை வளர்ச்சிக்காக ரூ.9 கோடி செலவில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கொச்சியில் நடந்த விழாவில், மத்திய மந்திரி கே.வி.தாமஸ் கூறினார்.*

*தென்னை வளர்ச்சி தின விழா*

*கொச்சியில் தென்னை வளர்ச்சி தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் மத்திய இணை மந்திரி கே.வி.தாமஸ் கலந்து கொண்டு தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:– மத்திய அரசின் உதவியுடன் கேரள மாநிலத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு மேம்பாட்டு திட்டம் மேற்கொள்ளப்படும்.*

*இந்த மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கொச்சியில் உள்ள எஸ்.ஆர்.வி. மேல்நிலைப்பள்ளியில் புதிய*

கட்டிடங்கள் கட்டவும், உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கவும், நிதி உதவிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் தென்னை வளர்ச்சிக்காக கேரளாவில் ரூ.9 கோடி ஒதுக்கப்பட்டு புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இதன்படி 10 ஆயிரம் தென்னை மரக்கன்றுகள் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அதன் மூலம் தென்னை வளர்ச்சிக்கும், தேங்காய் உற்பத்தி அதிகரிப்புக்கும் வழி வகுக்கப்படும். மேலும் நடப்பாண்டில் கேரளாவில் இருந்து உள்ள 13 துறை முகங்கள் வழியாக 10 ஆயிரம் டன் தேங்காய் எண்ணை ஏற்றுமதி செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

யார்–யார்?

விழாவுக்கு தென்னை வளர்ச்சி வாரிய சேர்மன் அனந்த போஸ் தலைமை தாங்கினார். விழாவில் டொமினிக் எம்.எல்.ஏ, கயிறு போர்டு சேர்மன் விஜயராகவன், உறுப்பினர்கள் வத்தலம் ரவிக்குமார், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் தாமஸ் மேத்யூ, டாக்டர் முரளிதரன் பேசினர்.

முன்னதாக விழாவில் 4 புத்தகங்கள் வெளியிடப்பட்டது. அவற்றை முன்னாள் விவசாய பல்கலைக்கழக துணை வேந்தர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டார். இதைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில் புஷ்பாங்கரன், கே.என்.மேத்யூ ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

**டிசம்பருடன் நிறைவடையும் பருவத்தில் தேயிலை உற்பத்தி குறைய வாய்ப்பு**



சுதானுகா கோசல்

கொல்கத்தா

நம் நாட்டில் தேயிலை பருவம் என்பது ஜனவரி மாதம் தொடங்கி டிசம்பர் மாதத்தில் நிறைவடைகிறது. நடப்பு பருவம் நிறைவடைய நான்கு மாதங்களே உள்ள நிலையில் நாட்டின்

தேயிலை உற்பத்தி, சென்ற ஆண்டைக் காட்டிலும் குறைய வாய்ப்புள்ளது என முன்னணி தேயிலைத் தூள் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

வட மாநிலங்களில்...

சென்ற ஆண்டு பருவத்தில் நம் நாட்டில் 98.10 கோடி கிலோ தேயிலை உற்பத்தி ஆனது. அவ்வாண்டில், வட மாநிலங்களின் தேயிலை உற்பத்தி 73.50 கோடி கிலோவாக இருந்தது. நடப்பு பருவத்தில் வட இந்தியாவின் உற்பத்தியில் குறைந்தபட்சம் 2 கோடி கிலோ குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே நாட்டின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி சற்று சரிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

சென்ற ஜூலையில் மட்டும் தேயிலை உற்பத்தி சுமார் ஒரு கோடி கிலோ சரிந்துள்ளது. ஆகஸ்டு மாதத்திலும் உற்பத்தி குறைந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தி குறைந்துள்ள நிலையில் தேயிலையின் விலை உயரத் தொடங்கியுள்ளது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ தேயிலையின் விலை சுமார் ரூ.25 உயர்ந்துள்ளதாக தெரிகிறது.

தேயிலைத் தூள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வரும் முன்னணி நிறுவனங்கள் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் தேயிலைத் தோட்டங்களை சொந்தமாகக் கொண்டுள்ளன.

மேக்லியோடு ரஸ்ஸல், குட்ரிக் குழுமம், அபிஜய் டீ, தன்சேரி டீ, அசாம் கம்பெனி மற்றும் ஜெயஸ்ரீ டீ அண்டு இண்டஸ்ட்ரீஸ் ஆகிய பிரபல நிறுவனங்கள் பல தேயிலைத் தோட்டங்களை சொந்தமாகக் கொண்டுள்ளன. தேயிலை விலை உயர்ந்து வருவதால், அக்டோபர்–டிசம்பர் காலாண்டில் இந்த நிறுவனங்களின் வருவாய், நிகர லாபம் சிறப்பான அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேக்லியோடு ரஸ்ஸல்

மேக்லியோடு ரஸ்ஸல் நிறுவனம் ஆண்டுக்கு 10 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யும் வகையில் தேயிலைத் தோட்டங்களைக் கொண்டுள்ளது. இது, உலகிலேயே மிகப் பெரிய தேயிலை நிறுவனமாகும். தன்சேரி டீ நிறுவனம் 12 தோட்டங்கள் வாயிலாக ஆண்டுக்கு 1.20 கோடி தேயிலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக உள்ளது. ஜெயஸ்ரீ டீ நிறுவனம் 25 தேயிலைத் தோட்டங்களைப் பெற்றுள்ளது. இவற்றுள் மூன்று ஆப்பிரிக்காவில் உள்ளன. அபிஜய் குழுமம் 17 தோட்டங்கள் மூலம் ஆண்டுக்கு 2.50 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்து வருகிறது.

நம் நாட்டில் வடகிழக்கு மாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் தேயிலை அதிக அளவில் உற்பத்தியாகிறது. அசாம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் தேயிலை உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. கர்நாடகா, திரிபுரா, இமாச்சலபிரதேசம், உத்தராஞ்சல், அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், சிக்கிம், நாகாலாந்து, மேகாலயா, மிசோராம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களிலும் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

**கரும்பு பயிரிடும் பரப்பளவு உயர்ந்து வருவதால் சர்க்கரை உற்பத்தி 38% அதிகரிக்கும்**

எதிர் வரும் 2010–11–ஆம் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு பருவத்தைக் காட்டிலும் 38 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருவமழை நன்றாக இருப்பதும், கரும்பு பயிரிடும் பரப்பளவு உயர்ந்துள்ளதுமே இதற்கு காரணமாகும்.

கரும்பு

கரும்புக்கு நல்ல விலை கிடைத்துள்ளதால், சென்ற ஆகஸ்டு 26–ந் தேதி அன்றுள்ளபடி கரும்பு பயிரிடும் பரப்பளவு, சென்ற ஆண்டின் இதே காலாண்டைக் காட்டிலும் 14 சதவீதம் அதிகரித்து 47.70 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது என்று மத்திய வேளாண்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கரும்பு பயிரிடும் பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளது. இதனால் கரும்பு மகசூல் அதிகரிக்கும். இதுபோன்ற காரணங்களால் நடப்பு 2010–11–ஆம் பருவத்தில் சர்க்கரை உற்பத்தி நம் நாட்டில் 2.55 கோடி டன்னாக அதிகரிக்கும் என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது. சென்ற பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 1.88 கோடி டன்னாக இருந்தது.

உலக அளவில் சர்க்கரை பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ள இந்தியா, சர்க்கரை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நம் நாட்டில் ஆண்டிற்கு 2.30 கோடி டன் சர்க்கரை தேவைப்படுகிறது. இந்நிலையில் வரும் பருவத்தில் சர்க்கரை உற்பத்தி தேவைப்பாட்டை விஞ்சிடும் வகையில் அதிகரிக்கும் என்று தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வினய்குமார் தெரிவித்தார். இதனால் சர்க்கரை விலை குறைய வாய்ப்புள்ளது.

ஏற்றுமதி

சர்க்கரை உற்பத்தி அதிகரிக்க உள்ளதால், வரும் 2010–11–ஆம் பருவத்தில் இந்தியா குறைந்தபட்சம் 25 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து சர்வதேச அளவில் சர்க்கரை விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10.86%–ஆக உயர்வு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஆகஸ்டு 21–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.86 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது, 10.05 சதவீதமாக இருந்தது. ஆக, பணவீக்கம் 0.81 சதவீதம் உயர்ந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 12.57 சதவீதத்திலிருந்து 12.71 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் பருப்பு வகைகள் விலை 14 சதவீதம் உயர்ந்திருந்தது. அரிசி மற்றும் கோதுமை விலை முறையே 8.05 சதவீதம் மற்றும் 7 சதவீதம்

*உயர்ந்து இருந்தது.*

*அதேசமயம் சென்ற ஓர் ஆண்டு காலத்தில் உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகள் விலை முறையே 51 சதவீதம் மற்றும் 9.90 சதவீதம் குறைந்துள்ளது. வெங்காயம் விலை 8.97 சதவீதம் குறைந்துள்ளது.*

*கடந்த ஜூன் மாதம் வரை தொடர்ந்து ஐந்து மாதங்களாக, மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இது, சென்ற ஜூலை மாதத்தில் 9.97 சதவீதமாக குறைந்தது.*

தமிழ் கூடல் 10 வருட சேவையில்...

**குறைந்த விலையில் மாநிலங்களுக்கு 25 லட்சம் டன் உணவுப்பொருள் ஒதுக்கீடு**

புதுடெல்லி, செப். 3-



சேமிப்பு கிடங்குகளில் உணவுப்பொருள் வீணாகும் பிரச்சினையில், உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவை தொடர்ந்து, குறைந்த விலையில் மாநிலங்களுக்கு 25 லட்சம் டன் உணவுப்பொருள் ஒதுக்க மத்திய மந்திரிகள் குழு முடிவு எடுத்து இருக்கிறது.

பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் உள்ள அரசு கிடங்குகளில் கடந்த 10 ஆண்டுகளில் 13 லட்சம் டன் உணவுப்பொருள் கெட்டுப் போன தகவல் சமீபத்தில் வெளிப்பட்டது. இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில், "உணவுப்பொருளை கெட்டுப்போக விடுவது அரசு செய்யும் தவறு. எனவே அந்த உணவுப்பொருளை ஏழைகளுக்கு இலவசமாக மத்திய அரசு வழங்க வேண்டும்" என்று நீதிபதிகள் கடந்த 31-ந் தேதி தீர்ப்பளித்தனர்.

இந்த நிலையில் நேற்று மந்திரிகள் குழு கூட்டம் நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி தலைமையில் நடந்தது. உணவு-விவசாயத்துறை மந்திரி சரத் பவார் உள்பட பல மந்திரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டம் ஒரு மணி நேரம் நடந்தது. கூட்ட முடிவில் சரத் பவார் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஏழைகளுக்கு இலவசமாக உணவுப்பொருளை கொடுக்கும் நிலை இல்லை. இதற்கு பதிலாக அனைத்து மாநிலங்களுக்கும் கூடுதலாக குறைந்த விலையில் 25 லட்சம் டன் உணவுப்பொருள், இன்னும் 6 மாதத்துக்கு வழங்கப்படும். இதை மாநில அரசுகள் ஒரு ஏழை குடும்பத்துக்கு 35 கிலோ வீதம் வழங்கும். அரிசி கிலோ ரூ.5.65 விலையிலும், கோதுமை ஒரு கிலோ ரூ.4.15 வீதமும் வழங்கப்படும். தற்போது இந்தியாவில் வறுமை கோட்டுக்கு கீழ் 6.52 கோடி பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மத்திய அரசின் குறைந்த விலையில் ரேசன் கடைகளில் உணவுப்பொருள் வழங்கப்பட்டு வருகிறது. இனி இந்த எண்ணிக்கை 8.1 கோடியாக உயரும். அதாவது 1.49 கோடி பேர் கூடுதல் பலன் பெறுவார்கள். இவ்வாறு சரத்பவார் கூறினார்.

தின பூமி

**விலைவாசி உயர்வை கண்டித்து தொழிற்சங்கங்கள் வரும் 7 -ம்தேதி நாடு தழுவிய ஸ்டிரைக் ஏ.பி.பரதன் பேட்டி**

செப். 4

**விலைவாசி உயர்வை கண்டித்து வரும் 7 -ம் தேதி தொழிற்சங்கங்கள் சார்பில் நடத்தப்படும் நாடுதழுவிய வேலைநிறுத்தம் திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று இந்திய கம்யூனிஸ்ட் அகில இந்திய பொதுச்செயலாளர் ஏ.பி.பரதன் கூறினார்.கோவையில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது; தொழிற்சங்க உரிமைகள் பறிப்பு, விலைவாசி உயர்வை கண்டித்து அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் வரும் 7 -ம் தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடக்கிறது.**

**இதில் சஞ்சீவரெட்டி தலைமையில் இயங்கும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கமும் கலந்து கொள்கிறது. தமிழகத்தலும் இப்போராட்டம் முழு வீச்சில் நடக்கும். இந்தப் போராட்டம் நாட்டில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தும். பல மாநிலங்களில் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருவதால் விவசாயிகளுக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.**

**விளைநிலங்களை எதற்காகவும் பறிக்கக்கூடாது. வீணாகும் உணவு தானியங்களை ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என சுப்ரீம்கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இதை ஏற்று மத்திய அரசு, குடோனில் உள்ள உணவு தானியங்களை பற்றாக்குறையில் தவிக்கும் மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும். வறுமைக்கோட்டுக்கு கீழ் 27 சதவீத மக்கள் இருந்தனர். இது, தற்போது 47 சதவீதமாக உயர்ந்துள்ளது.இந்திய அரசின் பிரதிநிதியாக நிருபமா ராவ் இலங்கை சென்றுள்ளார். அவரது பயணம் இலங்கை தமிழர்களுக்கு உதவிகரமாக இருக்காது. இவ்வாறு பரதன் கூறினார்.**